மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Dalithiyam Admires Idachaai (Live Field Study)

K. Srinivasan[1], Supervisor Dr. C. Markandan[2]

Doctoral Researcher[1], Assistant Professor[2], Vels Science Institute of Technology Higher Studies, Chennai, India

Manuscript ID : **MT127A0077**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 04.10.2022
Revised: 19.10.2022
Accepted: 07.11.2022
Published: 24.11.2022

Pages : 150-160

DOI: 10.5281/zenodo.7372668

ABSTRACT:

Kattu Vannanjoor, a village in Thondai Mandal, is today in Sankarapuram Circle, Kallakurichi District. Vadasiruvallur village is in the same circle. Here, a woman from the Edaiyar community fell in love with an Aathi Dravida goatherd man from KattuVannanjoor, after which the members of the Edaiyar community protested their love. When they go back to their husband's house, they have to go from the north bank to the south bank of the Manimuthu river, when suddenly there is a huge flood. She tries to cross the river to reach her husband's house because of the disgrace she has suffered in her father's house. If you bow down to the goddess and ask for directions, the river will flow away. But her husband did not give way. She went to the south bank and disappeared as a goddess in the rock. Then we will find in the research paper the data we have collected in the direct field study that Dalitiya is the first in the society, which is worshiped till today as the house deity of the same Aathi Dravida people (Paraiyar).

KEYWORDS:

Amman between the rocks, Dalithiyam, Konar, Suladu Creation, Sankaraburam

மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-2 பதிப்பு-4 டிசம்பர் 2022 | E-ISSN: 2583-0449

தலித்தியம் போற்றும் இடைச்சாயி (நேரடி கள ஆய்வு)

க. சீனிவாசன்[1], நெறியாளர். முனைவர் செ. மார்கண்டன்[2]
முனைவர்பட்ட ஆய்வாளர்[1], உதவிப் பேராசிரியர்[2]
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழிநுட்ப, உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தொண்டை மண்டலத்தில் உள்ள ஒரு கிராமம் காட்டு வன்னஞ்சூர் இன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் உள்ளது. இதே வட்டத்தில் வடசிறுவள்ளூர் கிராமம் உள்ளது. இங்கு இடையர் சமூக பெண்ணுக்கும் காட்டு வன்னஞ்சூரை சேர்ந்த ஆதிதிராவிடர் ஆடு மேய்க்கும் ஆணுக்கும் ஏற்பட்ட காதல் பின்பு இடையர் சமூதாயத்தை சேர்ந்தவர்கள் இவர்களுடைய காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்கள் திரும்பி கணவர் வீட்டுக்கு செல்லும்போது மணிமுத்தாறு நதிக்கரையில் வடகரையில் இருந்து தென்கரைக்கு செல்லவேண்டும். அப்போது திடீரென்று பெருவெள்ளம் புரண்டோடி வருகின்றது. தந்தையின் வீட்டில் ஏற்பட்ட அவமானத்தால் கணவரின் வீட்டை சென்றடையும் ஆவலால் ஆற்றைக்கடக்க முற்படுகிறாள். அம்மனை வணங்கி வழிகேட்டு ஆற்றில் இறங்கினால் ஆறும் வழிவிட்டது. ஆனால் அவளுடைய கணவனுக்கு வழிவிடவில்லை. தென்கரைக்கு சென்றவள் பாறையின் இடுக்கில் தெய்வமாக மறைந்தாள். பின்பு அதே ஆதிதிராவிட மக்களின் (பறையர்) குடிதெய்வம் என்று இன்று வரை வழிபட்டுவரும் சமூகத்தில் தலித்தியம் முதன்மையானது என்று நேரடி கள ஆய்வில் நாம் சேகரித்த தரவுகளை ஆய்வுக்கட்டுரையில் காண்போம்.

கருச்சொற்கள்

பாறையின் இடையில் அம்மன், தலித்தியம், கோனார், சூலாடு படைத்தல், சங்கராபுரம்

முன்னுரை

தமிழ் சமூகத்தில் வழிபாடு என்பது இனம் தோன்றிய நாள் முதல் தன்னை பாதுகாத்துக் கொள்ள தன்னோடு இனக்கமாக தனக்கு பாதுகாப்பு என்று உணர்ந்த மனித இனக்குழு அதனையை வணங்கி வழிபாடு செய்து வந்தனர் என்பது நாட்டுப்புற வழிபாடுகளில் நாம் அறிந்தனவே.

நாகரீக சமூகத்தில் இன்றும் தங்கள் இனக்குழுவை காத்து வந்த தங்கள் இனத்தில் தோன்றிய தலைவனை, தலைவியை இன்றும் வணங்கி வழிப்பட்டு வருவதை நாம் இன்றைய சமூதாயத்தில் காண்கிறோம். அதன் வழியில் எடச்சாயி என்ற இடைச்சாயி அம்மன் (கோனார் வீட்டு பெண்) என்ற ஒரு குடி தெய்வம் ஆதிதிராவிடர்கள் வணங்கி வழிபட்டு வருவதை இவ்வாய்வு கட்டுரையில் நேரடி கள ஆய்வின் மூலம் சேகரித்ததை பதிவு செய்கின்றோம்.

பொருள் விளக்கம்: குடிதெய்வம்

இந்த கள ஆய்வில் அந்த மக்களிடம் சென்று கலந்துரையாடியத்தில் "எடச்சாயி அம்மன் எங்கள் வீட்டு குடி தெய்வம் ஏன் என்றால் கோனார் வீட்டு பொண்ண எங்கள் வீட்டு (ஆதிதிராவிடர்) பையன் இழுத்துகிட்டு வந்ததனால அந்த கோனார் வீட்டு பொண்ணு எங்க வீட்டுக்கு வாழவந்திச்சி அதனால குடித்தனம் நடத்தவந்த பொண்ணு சாமியாயிட்டா அதனால நாங்க குடிதெய்வம் வருசம்தோறும் வணங்கிட்டு வரோம்."[1] இந்த குடிதெய்வத்தை வணங்கும் தோட்டி வகையராவை சார்ந்தவர்களை பலரோடு பேசும் பொழுது பெரியவர்கள் எடச்சாயி என்றும் படித்தவர்கள் இடைச்சாயி அம்மன் என்றும் பெரும்பாண்மையாக கூறினார்கள். எங்கள் குடியோடு சேர்ந்த குடும்பங்கள் கூடி வணங்கி வழிபட்டு வருகின்றோம். ஆகையினால் இடைச்சாயி அம்மனை எங்கள் குடிதெய்வமாக வணங்கி வருகின்றோம் என்று தரவுகள் பெறப்பட்டது.

பொருள் விளக்கம்: குலதெய்வம்

தன் இனக்குழுவின் முதல்வனாக அல்லது முதல்வியாக இருந்தாலும் அவர்களை தெய்வமாக ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்கள் தங்கள் குலத்தின் தெய்வம் என்று பல தலைமுறையாக ஏற்றுக் கொண்டு வணங்கி வழிப்பட்டு வருகின்றனர். இப்படி அடுத்தடுத்த தலைமுறைக்கு அறிமுகம் செய்வித்து தங்கள் குடும்பத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் முதன்மைப்படுத்தி வணங்கி வழிபட்டு வரும் தெய்வத்திற்கு "குலதெய்வம்" என்று பெயர்.

எடச்சாயி - (இடைச்சாயி) என்பது இடையர்கள் குலத்தில் பிறந்த பெண் இந்த இடையர்கள் என்பவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், வடசிறுவள்ளூரில் இடையர்கள் ஒரு சிறிய இனக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அவர்களில் பெருபாண்மையோர் பட்டி பட்டியாக ஆடுகள் வைத்து மேய்த்தும் கிடைப்போட்டும் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தினர். அப்போது ஆடுகள் மேய்ப்பதற்கு தென்கரையில் உள்ள காட்டுவன்னஞ்சூர் கிராமத்தில் பறையர் (ஆதிதிராவிடர்) என்ற இனக்குழுவில் தோட்டி வகையறாவை சேர்ந்த ஒருவர் ஆட்டு கிடைக்கு ஆடுமேய்க்க அமர்த்தப்பட்டார்.

அந்த ஆடு மேய்ப்பவன் இடையர் முதலாளிக்கு விசுவாசமாக இருப்பதும் நம்பிக்கையாக நடந்துக் கொள்ளும் விதமும் அந்த குடும்பத்தில் அனைவருக்கும் பிடித்துவிடுகிறது. அதிலும் அவர் பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆடு மேய்த்து வருவதால் அந்த குடும்பத்தில் அனைத்திலும் அவரை சேர்த்துக் கொள்வர். அந்த கோனாருக்கு ஒரு மகள் இரண்டு மகன்கள். அந்த மகளுக்கு அந்த வீட்டில் ஆடு மேய்க்கும் பறையர் (ஆதிதிராவிடர்) அவர்களின் மீது ஒரு தனிப்பட்ட பற்று. நம் குடும்பத்தின் மீது இவ்வளவு நன்றியாக உழைக்கிறாரே என்று அந்த கோனாரின் ஒரே மகள் அந்த பறையர் (ஆதிதிராவிடர்) மீது காதல் ஏற்பட்டு அந்த இருவரும் வீட்டிற்கு தெரியாமல் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் காதலன் நான் சாதியில் பறையர் நீ கோனார் (இடையர்) சமூகம் நம் காதலை ஏற்காது வேண்டாம் என்று சொன்னான். ஆனால் அந்த பெண் உண்மை அன்பிற்கு காதலுக்கும் சாதியில்லை என்று அந்த இடையரின் மகள் கூறினாள். அவள் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி அவனுக்கு நம்பிக்கை ஊட்டி காதல் கடந்தது. பிறகு இருவரும் இல்லற வாழ்க்கையில் ஈடுப்பட்டனர். பின்பு அந்த பெண் கற்பமானால் இதனை அறிந்த காதலன் திருமணம் செய்து கொண்டான். அதன் பின் அந்த இருவரும் கோனார் வீட்டிற்கு செல்ல அவர்கள் ஏற்காமல் அந்த பெண்ணையும் அவளுடைய கணவரையும் அவர்கள் உடன் பிறந்த அண்ணன் மார்கள் தந்தை சாதியை சொல்லி கேவலப்படுத்தி அந்த பெண்ணை (எங்கள் குலத்தை கெடுத்தவளே) இனியும் இங்கு நிற்காதே என்று சொல்லி நிறைமாத கற்பிணியை விரட்டியடித்தனர். கணவனும், மனைவியும் மீண்டும் கணவன் வீட்டுற்கு (தென்கரையில் உள்ள காட்டு வன்னச்சூருக்கு) கண்ணீர் ஆறாக ஓட கரங்களால் துடைக்க முடியாமல் அந்த பெண் கணவர் வீட்டை நோக்கு நடந்தாள். ஊர் நெருங்க இரண்டு பேர் ஊருக்கும் நடுவே மணி முத்தாறு ஒன்று ஓடுகின்றது. மணி முத்தாறு வடகரையில் அமைந்த ஊர் வடசிறுவள்ளூர் தென்கரையில் காட்டு வன்னஞ்சூர் அமைந்துள்ளது. இருவரும் வடகரையை நோக்கி நடந்து வந்தடைந்தனர் அப்பொழுது திடீரென ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து இரு கரையும் புரண்டு வெள்ளம் ஓடியது. நெடுநேரம் காத்திருந்த இருவரும் அதில் மனைவி ஆற்றை நோக்கி நடந்து ஆற்றைத் தொட்டு வணங்கிவிட்டு எங்களுக்கு வழிவிடு தாயே! என்று கூறி ஆற்றில் இறங்கினாள். அவள் போக போக வழிவிட்டது ஆறு. ஆனால் அவர் கணவருக்கு வழிவிடவில்லை மீண்டும் கரையில் நின்று கதறினார் கூச்சல் போட்டார் அந்த பெண் தென்கரைக்கு சென்று கரையேறும் போது இரண்டு



பாறை இடுக்கில் சென்று மறைந்தாள். அதனைக் கண்ட கணவன் துடித் துடித்தான் அழுது புலம்பி கரையிலேயே கிடந்தான். ஆற்றில் வெள்ளம் குறைந்த பிறகு வீட்டிற்கு வந்து நடந்ததை கூறினார். அதை யாரும் ஏற்க மறுத்தனர். பின்பு மாதங்கள் கழிந்தன அந்த பகுதியில் ஆடு, மாடுகள் மேய்க்கும் பெண்ணும் ஆணும் அங்கு இருக்கும் பாறை இடுக்கில் ஒரு அழுகுரல் கேட்டது. பின்பு அந்த அம்மன் கூறினால் என்னை ஆண்டு தோறும் வழிபட வேண்டும். நான் அம்மனாக மறைந்து விட்டேன் அதையும் யாரும் நம்பவில்லை.

ஒரு நாள் கணவரின் கனவில் தோன்றி நீ கவலைப்படாதே உன்னையும் உன்னை சார்ந்தவர்களையும் காத்து நிற்பேன்! நீ கலங்காதே! என்று கூறி. அதற்கு ஆண்டிற்கு ஒரு முறை குலதெய்வம் கும்பிடுவதற்கு முன் என்னை வணங்கி வழிபாடு செய்துவிட்டு குலதெய்வம் கும்பிடுங்கள் என்று கூறி. அதனையும் என் தாய் வீட்டு சீதனத்தோடு என்னை வணங்கி வழிபடவேண்டும். நான் நிறைமாத கற்பினியாக அமர்ந்தேன். அதனால் என் தாய் வீட்டு சீரோடு நிறைமாத கற்பத்தோடு உள்ள சூலாடு படைக்க கேட்டுக் கொண்டாள் அம்மன்.

இதனை அறிந்த கணவன் தங்கள் பங்காளிகளிடம் சொல்லி எல்லோரையும் அந்த பெண்ணின் தாய் வீட்டிற்கு சென்று நடந்ததைக் கூற அவர்கள் சாதியின் பெயரைச் சொல்லி விரட்டியடித்தனர். மனதளராமல் தன் மனைவியை வணங்க நான்கு ஐந்து ஆண்டுகள் போராடி காத்திருந்து பிறகு மீண்டும் அந்த பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த (வன்னியர் சாதியை சார்ந்த) ஒருவரும் அந்த பாறையிடுக்கில் ஏதோ ஒளிர்கிறது என்று சென்று பார்த்தார். அப்போது அந்த அம்மன் தன் தாய் வீட்டில் சொல்லும்படி கூறினாள். நான் பாறையிடுக்கில் மறைந்து உங்களை காக்கும் காவல் தெய்வமாக வாழ்கின்றேன். ஆண்டிற்கு ஒரு முறை எனக்கு தாய்வீட்டு சீதனமாக சேலையும் சூலாடும், காயக்கடசெலவும் வழங்கி வணங்கி வழிபாடு செய்து வந்தால் உங்களை காப்பேன் என்று சொல்லி அந்த மனிதரை தன் தாய் வீட்டில் சொல்லும்படி கூறியது. இதனைக் கேட்ட அந்த வன்னியர் மூன்று நாட்கள் கழித்து அந்த கோனாரிடம் சென்று அந்த பறையர்கள் சொல்வது உண்மை தான் உன் மகள் என்னிடம் நேரில் வந்து ஆற்றங்கரையில் கூறி சென்றாள். அதை ஆண்டுக்கு ஒரு முறை செய்ய சொல்லி சென்றார் அந்த வன்னியர். அதனை அறிந்த அந்த கோனார் மருமகனை அழைத்து என் மகளை வழிபட ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறினார்.

வழிபடுவோரும் வழிபாடும்

கோனார் அவர்கள் மருமனை அழைத்து நீங்கள் வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யுங்கள். அதற்கான செய்முறையை நான் செய்து தருகிறேன் என்று சொல்லி அனுப்பினார். அதனை ஏற்று மருமகன் தங்கள் இனக்குழுவான பங்காளிகள் கூட்டம்

போட்டு இந்த தகவலை சொல்ல தோட்டி வகையறாவை சார்ந்த அனைவரும் இந்த வழிபாடு செய்ய ஏற்பாடு செய்து ஆவணி மாதத்தில் குலதெய்வம் கும்பிடுவதற்கு முன்னாலில் குடி தெய்வம் கும்பிட வேண்டும் என்று அம்மன் சொன்னது போல ஆண்டுதோறும் செய்ய முடிவு செய்தனர்.

வழிபடுமிடம்

காட்டு வன்னஞ்சூர் ஊர் எல்லையின் கிழக்கே மணிமுத்து ஆற்றங்கரை அமைந்துள்ளது. ஆற்றங்கரையில் உள்ள பாறையிடுக்கில் அமர்ந்த அம்மனை அன்று முதல் வழிபாடு செய்ய தொடங்கினர். முதலில் இரண்டு தலைமுறையாக அந்த பாறையிடுக்கை வணங்கி வழிபாடு செய்து வந்தனர். இன்றும் அதே முறையில் வழிபாடு செய்யுமிடமாக பாறை முதன்மையான தெய்வமாகவும் நான்காவது தலைமுறையில் அந்த தோட்டி வகையறாக்காரர்கள் ஒன்று சேர்ந்து இடைச்சாயி அம்மனுக்கு சிமெண்ட்சிலை செய்து வழிபாடு செய்து வருகின்றனர் அந்த பாறையின் மேல் மேற்கு புறத்தில் இடைச்சாயி அம்மன் சிலை அமைக்கப் பட்டுள்ளது. அதில் ஐந்தாம் தலைமுறையின் கல்வி பயின்று வேலைக்குச் சென்ற ஒருவர் அந்த பாறையின் மேலே ஒரு அம்மன் சிலை வடிவமைத்து தந்துள்ளார்.


இடைச்சாயி அம்மன்

வழிபடுவோர்கள்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், காட்டுவன்னஞ்சூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் பகுதியில் ஒரு குறிப்பிட்ட இனக்குழு அதன் பெயர் தோட்டி வகையறாவை சார்ந்த 50-60 குடும்பங்களுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இவர்களின் குலதெய்வம் பெரியாயி ஆண்டு தோறும் ஆவணி மாதங்களில் வழிபாடு செய்வார்கள். இதற்கு முதல் நாளில் குடிதெய்வம் இடச்சாயி அம்மனை வழிபாடு செய்து விட்டு குறிப்பாக ஆண்கள் மட்டுமே வழிபாட்டில் ஈடுபடுவார்கள். கோனார்கள் அந்த ஒரு நாள் மட்டும் வந்து முறை செய்து வழிபாட்டினை துவக்கி வைத்துவிட்டு சென்று விடுவார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை வழிபாடு

இந்த தோட்டி வகையாறாவை சார்ந்த இனக்குழு தலைவர் ஒருவர் இருப்பார். தற்போது இராஜப்பா என்பவர் தலைமையை ஏற்று வழி நடத்துகின்றார். இவரின்

தலைமையில் பங்காளிகள் கூட்டம் நடத்தி வீட்டிற்கு ஒரு வரி இந்த வரிப்பணம், குடி தெய்வம் குல தெய்வம் இரண்டும் கும்பிடுவதற்கு மொத்தமாகும். செலவீணத்திற்கு ஏற்றார் போல் வரியை பிரித்து ஒவ்வொரு குடும்பத்திற்கு ஒரு தொகையை வரிபோட்டு அது வசூல் முடிந்தவுடன் சாமி கும்பிட தொடங்கிவிடுவர்.

ஆண்டு வழிப்பாட்டுக்குரிய ஏற்பாடுகள்

பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாடி குடி தெய்வம் கும்பிடுவோர் ஒரு மாதத்திற்கு முன்னாடி கோனார் வீட்டில் சொல்லிவிட்டால் அவர்கள் தங்கள் கெடையில் உள்ள நிறைமாத கற்பினியாக உள்ள ஆட்டினை வேண்டுதலுக்கு விட்டு விடுவார்கள். அதனை இடைச்சாயி அம்மனுக்காக வளர்த்துவருவர்.


அம்மனின் பூசைப் பொருட்கள்

ஆனால் இன்று பெண் வீட்டாரான முனுசாமி கோனார் வீடு ஏழ்மை நிலைக்கு ஆளானதால் சூலாடு மற்றும் பூசைசாமான்கள் அனைத்தையும் ஆதிதிராவிடர்களே ஒரு வாரத்திற்கு முன்னாடி வாங்கி கொடுத்து (மாப்பிள்ளை வீட்டார்) முனுசாமிக் கோனார் வகையறாவில் குடும்பத்தில் அந்த பெண் பிறந்தாள் என்பதற்காக இவர்களே ஆண்டு தோறும் அம்மனுக்கு பெண் வீட்டு சீர் செய்து வருகிறார்கள்.

பெண்ணழைப்பு

மாப்பிள்ளை வீட்டில் இருந்து (தோட்டி வகையறா - பறையர்) பெண் பரிசம் போடும் அனைத்தும் மேலதாளத்தோடு எடுத்துக் கொண்டு பெண்கள் ஆண்கள் அனைவரும் முனுசாமி கோனார் வீட்டிற்கு செல்வர். இந்த மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்று அமரவைத்து அவர்களுக்கு தேநீர் விருந்து கொடுத்து அவர்களுக்கு மாலை, சந்தனம் மரியாதை செய்து மாப்பிள்ளை வீட்டார் கொண்டு வந்த பரிசப்புடவை, மாலை மற்றும் அது சார்ந்த அனைத்தும் அவர்கள் வீட்டு தெய்வத்திடம் வைத்து வணங்கி இடைச்சாயி அம்மனுக்கு வேண்டிவிட்ட ஆட்டிற்கு மாலையிட்டு, கற்பூரம் காட்டி, ஆடு, பூசைக் கூடை, பரிச புடவை அனைத்தையும் வந்த மாப்பிள்ளை


சம்மந்திக்கு மரியாதை செய்தல்

வீட்டாரிடம் கொடுத்து முனுசாமி கோனாருக்கு மாப்பிள்ளை வீட்டார் புது துணி கொடுத்து அணிந்து வர மாமனாரை மேளத்தாளத்தோடு அழைத்து செல்வர். இவரை அழைத்துக் கொண்டு போய் ஊர் நடுவே நிறுத்தி விட்டு, இந்த அம்மனுக்கு பெண்கஎெல்லாம் சேர்ந்து காயக்கடசெலவு அரைத்து பூசைக் கூடை படைத்து தலை வாழையிலையில் வைத்திருப்பர். அதையும் எடுத்துக் கொண்டு ஊரின் எல்லை வரை பெண்களும் வருவர். ஊர் எல்லைத்தாண்டி ஆண்கள் மட்டும் இடைச்சாயி அம்மனை வழிபட செல்வார்கள். ஆண்கள் மட்டும் இந்த வழிபாட்டில் கலந்துகொள்வர் குறிப்பாக பெண்கள் எப்பொழுதும் கலந்துகொள்வதில்லை. அது ஆதியிலிருந்தே இந்த முறை இருந்துள்ளது. இன்றுவரை பின் பற்றுகின்றனர். மாலை ஐந்து மணிக்கு பொங்கல் கூடை, பூசைக்கூடை மேலதாளத்தோடு கோயிலைச் சென்றடைகின்றனர். பெண்ணாடு நிறைமாத கற்பமாக உள்ள சூலாடு அம்மனுக்கு பலிக்கொடுக்க அழைத்து வருகின்றனர்.



வழிபாட்டு முறைகள்

இடைச்சாயின் கோயிலை வந்தடைந்தவுடன், அம்மனை வணங்கி தோட்டி வகையாறா பூசாரி சக்திவேல் அவர்கள் பூசைக் கூடையை அம்மனிடம் வைத்து கற்பூரம் ஏற்றி பங்காளிகளிடம் கொடுப்பார். பின் ஆளுக்குகொறு வேலையாக பகிர்ந்துக் கொள்வார்கள்.

1. தண்ணீர் எடுப்பது,
2. பொங்கல் வைப்பது,
3. வடைக்கு மாவாட்டுவது,
4. காய்கறி நறுக்குவது,
5. படையிலுக்கு இலை சேகரிப்பது,
6. விரகு சேகரிப்பது,
7. பொங்கல் பானையை கழ்வி சுத்தம் செய்வது,
8. பயிறுவகைகளை அவித்தல்,
9. ஆட்டைக் குளிக்க வைத்து மாலையிடுவது,

ஒவ்வொருவரும் அனைத்து வேலைகளையும் பகிர்ந்துக் கொள்வார்கள். கொடுத்த வேலைகளை முடித்து பூசைக்கு தயாராவர்கள்.

பூசைனை முறை

தோட்டி வகையறாவின் சக்தி வேல் தந்தைப் பெயர் மாரி இவருக்கு அருள் வந்த நாள் முதல் இவரே இந்த கோயிலின் பூசாரியாக பூசை செய்து வருகிறார்.


அம்மனை கழுவுதல்

பூசை முறையில் முதலில் ஆற்று நீரைக் கொண்டு சாமி சிலையை கழுவி பின் சந்தனம், பால், குங்குமம், அபிசேகதூள் போன்றவைக் கொண்டு சாமி சிலைக்கு அபிசேகம் செய்து முடித்து பின் புத்தாடை, அம்மாவீட்டு சீராக கொடுத்தப் புடவையை அம்மனுக்கு சாத்தி மாலை அணிவித்து அலங்காரம் செய்து முடிப்பார்.

படையல்

தலைவாழையிலையைப் போட்டு இலையில் பொங்கல், பொறிகடலை அவுளு, வடை, அனைத்து பயிறு வகைகள், சாராயம், காயக்கடசெலவு படையலின் முதன்மையானது, அதில் முக்கியமானது பிரசவ செலவு கட்டியாக அரைத்து வைப்பர். பின்னர் பூசைத் தொடங்கும் எடச்சாயி அம்மன் உறைந்த இடமான பாறை இடுக்கில் மஞ்சள், குங்குமம் இட்டு, மாலை, உதிரிபூக்கள் போட்டு அலங்காரம் செய்து அங்கிருந்து கற்பூரம் ஏற்றி பின்பு சிலைகளுக்கு பூசை செய்து பிறகு மூலக்கோயிலில் சிலைக்கு பலவகை படையல், கற்பூரம் ஆராதனை செய்து ஆட்டிற்கு மஞ்சள், பூ, மஞ்சள்நீர் கூந்தல் தெளித்து பின் அம்மனுக்கு கண்ணைக் கட்டி சூலாட்டை வெட்டி, கோழியை அறுத்து எலுமிச்சை பழத்தை குத்தி முப்பூசை படையலிட்டு இடைச்சி அம்மனுக்கு பலிக்கொடுத்து பின் சூலாட்டை கிழித்து துள்ளுக்குட்டியை வெளியே எடுத்து படையல் வைத்து அம்மனுக்கு பூசை செய்வார்கள். அதன் பின் பூசாரிக்கு அம்மன் மருளாடுவாள். அப்போது பங்காளிகள் கூடி இந்த ஆண்டு பூசையில் குறைகள் இருக்கா, எங்களுக்கு நல்லது நடக்குமா? இடைச்சாயி அம்மனிடம் அருள்வாக்கு பெருவார்கள். பின்பு வெட்டிய ஆட்டினை அறுத்து அதில் பெண்வீட்டாருக்கு ஒரு பின் கால் தொடையை அவர்களுக்கு கொடுத்துவிடுவர்.

பூசை முடிந்தவுடன் அவர்களுக்கான முறை ஆட்டின் பின்கால் தொடைகறி, பூ, பழம், தேங்காய், பொறிகடலை அனைத்தும் கொடுத்து மரியாதை செய்து அனுப்பிவைப்பார்கள்.



விருந்து படைத்தல்

இடைச்சாயி அம்மனுக்கு படையலிட்ட எந்த பொருளும் பிரசாதமும் வீட்டிற்கு எடுத்து செல்வதில்லை. அங்கவே ஆட்டை கறியாக்கி சமைத்து அனைத்து பங்காளிகளும் இரவு எந்த நேரமானாலும் சமைத்து ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு முடித்த பிறகு மீதியுள்ள உணவு, பொருள், கறி அனைத்தும் எதிரில் உள்ள ஆற்றில் அள்ளிக் கொட்டிவிட்டு எடுத்துக் சென்ற பூசைக்கூடையில் உள்ள சாட்டை, மணி, பூசைத்தட்டு, கத்தி, அறுவா போன்றவைகளை மட்டும் எடுத்து வருவார்கள். 10.09.2022 அன்று இரவு 10.40 மணிக்கு வீடு திரும்பினர்.

எல்லைக்கல் படைத்தல்



இடைச்சாயி அம்மனை வழிபட்டுவிட்டு வரும்பொழுது ஊர் எல்லையில் எல்லைக்கல்லில் கோழி அறுத்து துர்த்தேவதைகளுக்கு இரத்தசோறு வீசிவிட்டு யாரும் திரும்பி பார்க்காமல் வருவார்கள். எல்லைக் கல்லைத் தாண்டி ஊருக்குள் வந்தவுடன் எடச்சாயி அம்மன் கோயில் உள்ளது. அங்கு அந்த பூசைக் கூடையை வைத்துவிட்டு வீடு திரும்புவார்கள். அடுத்த நாள் குலதெய்வம்

கும்பிடுவார்கள் அனைத்தும் அன்று காலை முதல் இரவு 11 மணி வரை நேரடி கள ஆய்வு மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஆகும்.

முடிவுரை

தமிழர் சமயத்தில் குலதெய்வ வழிபாடுகள் ஏராளமாக இருந்தாளும் இன்றும் அந்த வழிபாடுகளை நடத்திவருகிறது. நம் தமிழ் சமூகம் மனித குல ஒற்றுமை, உறவுகள் மேம்படுதல், ஒன்று கூடி வழிபடுதல், மனக்கசப்புகளை தூக்கி எறிதல், கோனார் - ஆதிதிராவிடர்கள் ஒற்றுமையை சாதிகளை கடந்தும் பறையரின் பண்பாட்டை, பண்புகளை ஒரு கோனார் பெண்ணின் உண்மைக்காதலால் அறியவும் தன்னை நம்பி வந்த பெண்ணை பறையர்கள் ஒரு குடும்பத்தின் பெண்ணாக கருதாமல் ஒரு சமூகமே ஏற்று வழிபடுகிற பண்பும் பெண்களை வஞ்சுக்கும் இச்சமூதாயத்தில் பெண் தெய்வத்தை ஆண்கள் மட்டும் வழிபடுவது ஆண் பெண் சமத்துவத்தை காட்டுகிறது. பெண்ணின் பெருமையை போற்றுகிறது. தாய் தெய்வத்தை என்றும் வணங்குகிறது.

அடிக்குறிப்பு

	பெயர்	வயது	நாள்
1.	க. சரசு	38	15/01/2022
2.	மு. தேவர்	42	15/01/2022
3.	ப. மோகன்	47	15/01/2022
4.	ம. இராஜப்பா	52	10/09/2022
5.	சக்திவேல் பூசாரி	45	10/09/2022
6.	சின்னக்கன்னு	58	10/09/2022
7.	முனியன்	78	10/09/2022
8.	க. மாரியம்மா	67	10/09/2022

பெரும்பாலும் தோட்டி வகையாறவை சார்ந்தவர்களை கள ஆய்வில் அதிகம் சந்தித்து தரவுகள் பெறப்பட்டன.

9. கள ஆய்வுகள் நேரடியில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.

FOOTNOTE

	Name	Age	Date
1.	K. Sarasu	38	15/01/2022
2.	M. Dewar	42	15/01/2022
3.	P. Mohan	47	15/01/2022
4.	M. Rajappa	52	10/09/2022
5.	Sakthivel Priest	45	10/09/2022
6.	Chinnakannu	58	10/09/2022
7.	Munian	78	10/09/2022
8.	K. Mariamma	67	10/09/2022

Most of the data were collected from people belonging to the scavenger species in the field study.

9. Photographs taken directly from field surveys.